# இந்துசாதனம்.

(1889)

## THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: வரு 1-க்கு | ரூ | 5-00 |
| இலங்கை, இந்தியா: | " ரூ. | 8.00 |
| தொலைவாய்ப்பகுதி: | " ரூ | 9.00 |
| தனிப்பிரதி: | | சதம் 5 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன்முறைக்கு:— | ஒருகலம் | ரூ. 9-00 |
| " | அரைக்கலம் | ரூ. 4-50 |
| " | கால்கலம் | ரூ. 3-00 |

அடுத்த முறைகட்கு ஷை விகிதங்களிற் பாதி விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா

புத்தகம்—௪0. } யாழ்ப்பாணம்:—விபவவரு ஆடிமீ ௨௨௳, (1928 ஆகஸ்ட் 6) திங்கட்கிழமை. { இலக்கம்—௧௧.


உ
கணபதிதுணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றேது
மதம்பூத்தவிநாயகன்றள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை நான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் வியாபாரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொது ஜனநலத்தைக்கருதியே இப்போதுஇந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, கிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாரூ, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாலை, சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரகப்பஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாமபிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, இருவருஷத்தன் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாயவு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் நீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைருத்தலுக்கு ரூபா ௬0. கால் ருத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினல் முன்மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
சிலோன்.

(M. 36.)

## இலங்கை ஆயுள்வேத வைத்தியகல்லூரி யாழ்ப்பாணம்.

மேற்படி கல்லூரியிற் சேர்ந்து ஆயுள்வேத வைத்தியத்தையும் ஒருங்கே கற்க விரும்புவோரும் ஆயுள்வேத சித்த வைத்தியத்தைமட்டும் (கொறஸ்போண்டன்ஸ்கோஸ்) லிகிதகற்பனை மூலமாகக் கற்று டிப்பினோமா என்னும் அரங்கேற்றப் பத்திரம் பெற விரும்புவோரும் தங்கள் மனுப்பத்திரங்களை மேற்படி கல்லூரித் தலைவருக்கு அனுப்பி அக்கற்பனைக்குரிய விஷயங்களைத் தெரிந்துகொள்க. அனுபவசித்தியுள்ள நசர்மார்களுக்கும் சுதேச வைத்தியர்க்கும் கற்பனையின் கால அளவு அவர்க்குரிய அனுபவசித்திக்குத் தக்கதாய்க் குறைக்கப்படும்.

இலங்கா ஆயுள்வேத வைத்திய கல்லூரித்
(Q. 106.) தலைவர்.

## யாழ்ப்பாண ஐக்கியவியாபாரசங்கம் லிமிட்டெட்.

1918-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

பிறதேசங்களிலிருந்து
நெல்லு
அரிசி
மற்றுஞ் சாப்பாட்டுக்குரிய சகல சாமான்களும், பலவகையான சாய்ப்புச் சாமானகளும் வருவித்து விற்பவர்கள்.

இது யாழ்ப்பாணத்தவர்களால் நடத்தப்படும் பிரபலமான வர்த்தகம்.

சாமான்கள் திறமானவை.

விலை சகாயம்.

சுதேச முயற்சியைத் தைரியப்படுத்துங்கள்.

தங்கள் ஆதரவை எதிர்பார்க்கின்றோம்.

பெரிய கடையின் வடமேன் வீதிகளில் இக்கம்பெனிக் கடைகள் நடைபெறுகின்றன.

(Q. 103)

## அறிவித்தல்.

இருடாய்மரக்கப்பலொன்று கூலிக்குவிடுவதற்குக் கேள்விப்பத்திரங்கள்

1929-ம் ஆடு தைமீ 1௳ தொடக்கம் சித்திரைமீ 3௳ வரைக்கும் இலங்கை முத்துச்சிப்பிப்பார்களைப் பரிசோதிப்பதற்காகவுபயோகிப்பதற்கு ஒரு .... கூலிக்கு விடுவதற்கான கேள்விப் பத்திரங்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் இருபிரதிகளாய் ஒரே உறையிலிட்டு சீல் அடிக்கப்பட்டுக் கொழும்பு அரசினர் .... பரிபாலனர்க்காரியாலயத்தில், டெண்டர்போட்ட பெட்டியில் ... விலாசமிடப்பட்டிருக்கவேண்டும். ஷை பத்திரங்கள் அடைக்கப்பட்ட உறையின் இடப்பக்க மேன்மூலையில் 'முத்துச்சிப்பி குளிக்கச் சோதனைக்கு ஒருகப்பல் கூலிக்கு விடுவதற்கான கேள்விப் பத்திரம்' என்று குறிப்பிடப்பட்டு 1928ஆண்டு புரட்டாதிமீ 1௳ செவ்வாய்க்கிழமை நடுப்பகலுக்குப் பிந்தாமல் ஷை காரியாலயத்தில் சேரவேண்டும்.

முழுவிபரங்கட்கு 1928ஆடு ஆடிமீ 27௳ 'கெசற்' பத்திரிகையைப் பார்க்கவும்.

ஜோசெப் பியேசன்,
ஆதனசாலைக் காரியதரிசியும்
கடற்பரிசோதகரும்.

கொழும்பு ஆதனசாலை,
1928ஆடு ஆடிமீ 24௳.
(J 915.)

## சக்தி வீரிய விருத்தி லேகியம்.

(1) தற்காலத்தில் அனேகவிதமான வீரியவிருத்தி அவுடதங்கள் வெளிவந்திருப்பினும் அவற்றுள் எங்கள் சக்தி வீரியவிருத்தி லேகியமே விசேஷகுணத்தைக் கொடுக்கும்.

(2) இந்த லேகியத்தின் குணமானது உஷ்ணம் முதலிய மேகரோகங்கள் ஜீவரத்னபீடமாகிய தேகத்தைத் தாக்குவதால் உண்டாகும் எலும்புருக்கி ரோகங்களையும் அரிதஸ்கலிதமென்னும் ஒர்வித நோயினல் நேரிட்ட இடுப்புவலியும் மலேரியாக் காய்ச்சலினுல் (Malarial fever) சரீரம் மெலிந்து சாப்பாட்டில் பிரியமில்லாமல் தேகவெளுப்பு, பாண்டு, சோகை, காமாலை, வீக்கம், மலச்சிக்கு, பித்தக்கிறுதி, பித்தவாய்வு, இருதயத்துடிப்பு, நரம்புத்தளர்ச்சி, கைகால் அசதி, விரைவாதம், ஆண்தன்மை நாளுக்குநாள் குறைதல் முதலிய துர்க்குறிகளையும் நீக்கி மனோற்சாகம், ஞாபகசக்தி, வீரியவிருத்தி, தேகபலம், சரீராரோக்கியம், முதலியன உண்டாக்குவதில் மேன்மைவாய்ந்து, ஸ்திரீகளுக்கு ஏற்படும் சகல பெலவீனத்திற்கும் இதற்கு நிகர் மருந்து கிடையாது.

(3) எங்கள் சக்தி வீரிய விருத்தி லேகியத்தை 40 நாள் முறைப்படி உட்கொண்டால் தேகத்தில் ஏற்பட்ட உஷ்ணத்தை சமன்படுத்தி இரத்தத்தைச் சகல நரம்புகளிலும் ஓடச்செய்து சப்ததாதுகளுக்கும் வலுவை ஏற்படுத்தி அதிக வயதினாலும் பலஈனத்தினாலும் நரம்பு சுருங்குவதால் ஏற்பட்ட சகலவித சோர்வையும் புறக்கணித்து மனரம்மியமான இன்பரசவாழ்வைத் தரத்தக்கதோர் சித்தானந்த "மகா சஞ்சீவினி" என்றல்லவோ சொல்லலாம்! இச்சாபத்தியம்!!

| | | | | |
|---|---|---|---|---|
| 1 ருத்தல் மருந்து ரூபா | 10 | 00 | } | வீ. பீ. சார்ஜ் பிரத்தியேகம். |
| ½ " " " | 5 | 00 | | |
| ¼ " " " | 3 | 50 | | |

தந்திவிலாசம்:— "Chambavee" Karainagar.

இங்ஙனம்,
பிஷக்வரர, டக்டர் எம் என். பிள்ளை ஏ. எம், ஏ. சி.
சிவ சாம்பவி ஔடதாலயம்,
காரைநகர், யாழ்ப்பாணம்.

குறிப்பு:—எங்கள் லேகியத்தில் ஓர்விதமான மிருகசத்துக்களும் லாகிரிவஸ்துக்களும் சேர்க்கப்படவில்லை. இவை தாவரவஸ்துக்களைக்கொண்டே தயாரிக்கப்பட்டது மேலும் எங்களிடம் அனேகவிதமான ரோகங்களுக்கு மருந்துகள் தயார்செய்யப்பட்டிருக்கின்றன மருந்து வேண்டியவர்கள் வியாதியின் குணங்கள், வயது, உத்தியோகம், புருஷர் அல்லது ஸ்திரீ என்பதையும், கலியாணமானவரா இல்லையா; வியாதி ஆரம்பித்தகாலம், முன் வேறு எவ்வித வியாதிகள் ஏற்பட்டதென்பதும் விபரமாக எழுதினல் எங்களால் தீர்க்க முடியுமானல் அதற்குத்தகுந்த மருந்துகளை V. P. P. மூலமாய் அனுப்புவோம்; அல்லது தீராதரோகமாயிருந்தபக்ஷத்தில் பதில் எழுதிவிடுவோம்.

பதில் வேண்டுவோர்கள் 2 Ans. 6 Pies முத்திரையும் சிங்கப்பூர்மலாய்நாடுமுதலியதொடுவாய் ராச்சியப் பகுதிகளிலிருந்து 20 cts. முத்திரையும் அனுப்பினல் விபரமாகப் பதிலெழுதப்படும்.

(Q 104)

## கௌரவ ஸேர் பொன் இராமநாதனவர்கள் இயற்றிய நூல்கள்.

1. செந்தமிழ் இலக்கணம் முதற்பாகம் (எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும்) நன்னூற் சூத்திரங்களைத் தழுவி இலகுவான உரை நடையில் இயற்றப்பெற்றது. 545 பக்கங்கள் கொண்டது. உயர்ந்த பதிப்பு ரூபா 3-00. சாதாரண பதிப்பு ரூபா2 அணு 8.
2. பகவத்கீதா — தமிழ் மொழிபெயர்ப்பும் விருத்தியுரையும் 517 பக்கங்கள் கொண்டது ரூபா 2-00.
3. திருக்குறள் பாயிரமும் இராமநாதீயம் என்ற விருத்தியுரையும் 143 பக்கங்கள் கொண்டது ரூபா 1-00.

மானேஜர்,
இராமநாதன் கல்லூரிப் புத்தகசாலை,
சுன்னுகம், யாழ்ப்பாணம்.

(H 61)

## நோவினல் வருந்துவோர்!

முதன் முதல் நினைப்பது எதாவது தைலத்தைப் பற்றியே. அதாவது சிக்கிரத்தில் சுகங் கொடுக்கக் கூடிய தைலம். அறுதான்.

## லிட்டில்ஸ் ஓரியென்டல் பாம்.

ஆதித் தைலமும், இந்த நோவுகளை நிச்சயமாய்க் கண்டிக்கக் கூடியதும் இதுவே.

தலை வலி
நரம்பு வலி
நெஞ்சு வாய்வு
தொடைப் பிடிப்பு
வாதம்
சுளுக்கு
முதலிய நோய்களுக்கு




இதிற் கொஞ்சந் தடவ நிரம்பிய சுகங் கிடைக்கும்.

எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

(I—28 Little's Oriental Balm and Pharmaceuticals Ltd., Madras.

(Y. 51.)

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் விபவ௵ ஆடி௴ ௨௨௳ திங்கட்கிழமை.


## தெய்வச் செயல்.

ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும், அன்றியதுவரினும் வந்தெய்தும்-ஒன்றை, நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும், எனையாளும் ஈசன்செயல்.

மனுஷர்களுள் மகா ஞானிகள் தவிர எனையோர்களெல்லாம் எக்கருமத்தையும் தஞ்செயல் தஞ்செயல் என்று நினைப்பதும் தாம் எடுத்த கருமம் பிரதிகூலமான சமையத்தில் மாத்திரம் தெய்வத்திற் பழிசுமத்துவதும் இயல்பாகும். எக்கருமமும் இறைவன் செயலால் நிகழ்வதேயல்லாமல் மனுஷனால் ஆவது ஏதுவுமில்லை. இந்த உண்மையை உள்ளபடி உணர்ந்துகொள்பவர்களே அறிவுடையோரென மதிக்கத்தக்கவராவர்.

தெய்வச்செயல்கள் நிகழும்போது சிற்சிலசமையங்களில் அவை மனுஷனுக்குப் பிரதிகூலமானவைபோற்காணப்படும். அதனால் மனுஷனுக்குத் தெய்வத்தில் விசுவாசங் குறைவதுமுண்டு; அது அவனுடைய குற்றமேயல்லாமல் தெய்வத்தைப் பொறுத்ததல்ல. கோயில்கள் மடாலயங்கள் முதலாம் தருமஸ்தாபனங்கள் விஷயமாகச் சிற்சில சமையங்களில் மனுஷன் காத்திருந்ததற்கு மாறான விஷயங்கள் நிகழ்வதுமுண்டு. தெய்வச்செயல் எல்லாம் நன்மைக் கானவைகளேயென்றும் அச்செயல்கள் எங்ஙனம் முடியுமென நிச்சயிப்பதற்குச் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினராகிய எமக்கு அறிவு போதாதென்றும் நாம் விளங்கிக்கொள்ளுதல்வேண்டும்.

இங்குள்ள தருமஸ்தாபனங்களுள் பல மிகவும் ஈனநிலையிலிருப்ப, சில தம்பொருள் துர்விநியோகஞ் செய்யப்பட, உலகத்தார் மெச்சும்படி கிரமமாக நடைபெற்றுவரும் தருமஸ்தாபனம் இச்சமையத்தில் இடையூறடைதற்கு ஏதுவானதுபோற் காணப்படுகின்றது. இவ்வாறான செயல் பலருடைய மனதையும் புண்படுத்துகின்றது. ஆனால் அறிவுடையோர் எல்லாம் இறைவன் செயல் என்பதையும் இறைவன் செயல் அத்தனையும் நன்மைக்கேஎன்பதையும் மனசில் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

அன்றுமுடி துடிய நிருக்காது ராமன்முன்
அருங்கா றுறைந்த தென்ன
அண்டரேல் லாமதிர்த முண்டிடப் பாமனுக்
காலம் பதித்த தென்ன
வென்றிவரு தேவர்சிறை மீட்டநீ களவில்வே
டிச்சியைச் சேர்ந்த தென்ன
மேதினி படைத்தமயனுக்கொருசிரம்போகி
வெஞ்சிறையி லுற்ற தென்ன
என்றுமொரு பொய்சொலா மன்னவன் விலை
தென்னகாண வல்லமையி னால் [போன
எண்ணாத்தி ஞலோன்றும், வாராது பாமனெத்தனைப் படிமுடியுமாம் [சிவ
மன்றுதனில் நடனமிடு சங்கா தான்பெற்ற
வரபுத்ர வடிவேல வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயலீடு
மலைமேவு குமரேச னே.

## சிவஞான போதம்.

(முதற்பாகம்.)

கனம், ஸ்ரீ பொ. இராமநாதன் அவர்களால் அருளிச்செய்யப்பட்டுப்
பிரகடனஞ்செய்யப்பட்டது.

[40-ம் புத்தகம், 9-ம் இலக்க இந்துசாதனப் பத்திரிகையின் தொடர்ச்சி.]

சூத்திரம்—௩.

உளது இலதென்றலின், எனதுடலென்றலின், ஐம்புலன், ஒடுக்கம் அறிதலின், கண்படில் உண்டிவினையின்மையின், உணர்த்த உணர்தலின் மாயா யந்திர தனுவினுள் ஆன்மா.

உயிர் உடலுக்கு வெளியேயும் தங்கிநிற்பதனால் அவ்வுடலின் இயக்கங்கெட்டு அது பிணமாகக் காரணமில்லை அன்றியும் ஒவ்வொரு உயிரும் ஒவ்வொரு உடலையே இயக்கவேண்டும் என்பதுமில்லை ஆனால் ஒரு உடல் கெட்டொழிய மற்றொரு உடல் நிலைத்துநிற்பதை நாம் பிரத்தியட்சத்திற் காண்கிறோம் எனவே ஒவ்வொரு உயிரும் ஒவ்வொரு உடலையே இயக்குமென்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை ஆதலால் உடலுக்கு வெளியே உயிருக்கு வியாபகம் இல்லையென்று முடியும். என்றால், ஒருவன் தன் கண்ணால் ஒருபொருளைக் காணும்போது, அவனது கண்ணொளியோடு அவனது உயிருணர்வும் அப்பொருளின்பாற் சென்று பற்றுவதால் உயிர் உடலுக்கு வெளியேயும்வியாபித்தல்பெறப்படாதோ வெனின், அன்று. ஒருவன் ஒருபொருளைக் காணும்போது அப்பொருளின்பால் அவனது கண்ணொளியுஞ் சென்றுபற்றுவதில்லை அவனது உயிருணர்வுஞ் சென்று பற்றுவதில்லை. அப்பொருளின் ஒளியே அவனது கண்ணிந்திரியத்திற் சேர்கின்றது அவ்வொளியோடு அக்கண்ணிந்திரியத்தில் உயிருணர்வும் கூடுவதன்றி வேறில்லை. எனவே, உடலுக்கு வெளியே உயிர் வியாபித்தலில்லையென்பதே பெறப்படும். ஆனால், உடலின்கண்ணே வந்து கூடும் பொருள்களை மாத்திரம் உயிர் அறியுங் காரணத்தால். அவ்வுயிருக்கு அதன உடலுக்கு வெளியே விளக்கம் இல்லையென்பது பெறப்படுமேயன்றி வியாபகம் இல்லையென்பதும் பெறப்படுமோ வெனின், பெறப்படும். உயிர் அறிவாகாரமாய் நிற்கும் பொருளாதலால் அதற்கு விளக்கம் வேறு வியாபகம் வேறு என்பதில்லை எக்காலத்து எங்கே விளங்கிநிற்குமோ அக்காலத்து அங்கே வியாபித்து நிற்கும். அன்றியும் அறிவாகாரமானபொருளைக் கூறுபடுத்தி அதன் ஓர் கூறு விளங்கியும் மற்றொரு கூறு விளங்காதும் நிற்கும் என்றலும் பொருத்தமன்று. இவ்வேதுக்களாலும் பிறவேதுக்களாலும் உடலுக்குவெளியே உயிர்க்கு வியாபகமில்லை என்பதே பொருத்தமாய் முடியும்

இனி, ஓர் உயிர் அதன் உடம்பினுள்ளேயும் எவ்வாறு நிற்கும் என்பதையும் ஆராய்வாம். அந்த உடலினிடத்தும் ஒன்றுபோல் அறிவு எக்காலத்தும் நிகழுவில்லை. ஒவ்வொரு காலத்து ஒவ்வொரு இந்திரியத்திலேயே அறிவு நிகழ்கின்றது. கண்டலறிவு நிகழும்போது கேட்டலறிவு நிகழ்தலில்லை. மற்ற இந்திரியங்களில் நிகழும் அறிவும் இத்தன்மைத்தே. ஆதலால் உடல் முழுதும் உயிர் நிறைந்து நிற்குமென்பதற் கிடமில்லை. அப்படியே, உடலின் ஓர் குறிப்பிட்ட இடத்திலேயே எப்போதும் உயிர் நிற்குமெனவும் இடமில்லை. நிற்குமேல் அவ்வுடலினிடத்து எப்போதும் ஒன்று போல் அறிவுநிகழவேண்டும் அதுவுமின்றாதலால், உயிர் உடலினுள் ஏகதேசப்பட்டு நிற்றலுமில்லையென முடியும். ஆகவே, உயிர் உடலினுள் எவ்வாறு தான் நிற்குமென்பதை ஆராய்வாம்.

உயிர் உடலினுள் ஒருகாலத்து ஒரு இந்திரியத்தோடுதான் கூடிநிற்கும். கண்ணிந்திரியத்தோடு கூடி நிற்கும்போது காது இந்திரியத்தோடு கூடிநிற்பதில்லை. மெய் இந்திரியத்தோடு கூடிநிற்பதுமில்லை ஆனால் உயிர் எந்த இந்திரியத்தோடு கூடிநிற்கும்போதும் அவ்விடத்து ஏகதேசமாய் நிற்பதில்லை மெய் இந்திரியத்தோடு கூடிநிற்கும்போது மெய்யில் ஒரு கூற்றில்மாத்திரம் அதுநிற்பதில்லை. அவ்விந்திரியம் முழுமையினுமே வியாபித்து நிற்கும் அப்படியே எந்த இந்திரியத்தினும் வியாபித்து நிற்கும். இதுதான் "வசித்திடவரும் வியாபகம்" எனப்படும். இத்தகைய வியாபகமே உயிர்க்குண்டு. இவ்வியாபகமும் உடலுக்கு வெளியேயில்லை ஆதலால் உடலினுள்ளே கூடியுள்ள போது அதனுள்ளே இத்தகைய வியாபகம் உயிர்க்குண்டு. சூக்கும உடம்போடு கூடியுள்ளபோது இத்தகைய வியாபகம் உயிர்க்குண்டு. மற்ற உடம்புகளோடு கூடியுள்ளபோதும் அப்படியே. ஆனால் உடம்பில்லாதபோது உயிரின் வியாபகம் எப்படியெனிற் கூறுதும்

உயிர்க்கு ஆணவத்தடை அநாதியேயுண்டென்றும் அத்தடை நீங்குதற்பொருட்டு மாயையினின்றும் உடல் முதலிய அமைப்படைந்துவருமென்று முன்னர்க் கூறப்பட்டது. (சூ 1—பா. 11.) யாதாலும் உடல், உயிர்க்கு அமைக்கப்படுமுன் அவ்வுயிர்க்குச் சிறிதும் வியாபகமில்லை உயிர் ஆணவத் தடையினின்றும் நீங்கியபின் அவ்வுயிர்க்கு எவ்வித மாயாஉடலும் வேண்டப்படுவதும் இல்லை. அக்காலத்து அவ்வுயிரோடு கூடியவுடல் மாயாவுடலன்று. இம்மாயாவுடலே சுட்டிப்பொருள். இதனுள்ளே வியாபகமாய் நிற்கும் உயிரின் வியாபகமும் ஏகதேச வியாபகமாய் முடியும். இதுவன்றி இவ்வுடலோடு கூடாது, யாண்டும் வியாபித்து நிற்கும் முதல்வனையே தன்னுடலாகக்கொண்டு, உயிர் நிற்கும் முத்திநிலையில் அது அம்முதல்வனைப்போல் எங்கும் வியாபித்து நிற்கும் என்றால், ஓர் காலத்துச் சிறிதும் வியாபகமின்றிக் கிடந்த உயிர், மாயா உடலோடு கூடிய போது அதனுள்ளே மாத்திரம் வியாபித்து. அப்பால் முத்திநிலையில் யாண்டும் வியாபித்து நிற்குமேல், சித்துப்பொருளாகிய உயிர்க்கும் குறுகுதல் பெருகுதல் உளாலுங் குற்றம் ஏற்படுமேயெனின், கூறுதும்: (தொடரும்.)

## நல்லூர்க் கந்தசுவாமிகோயில் வழக்கு.

இன்று பகல், மேற்படி கோயில் "பொது" வாகவுரிய தருமச்சொத்தாகுமென அதைப்பற்றி நடந்த வழக்கில் தீர்ப்புச் செய்யப்பட்டது. இதுவே அவ்வழக்கிலுள்ள பிரதான விஷயமாகும். மற்ற விஷயங்கள் பின்னர் விளங்கப்படும். விளக்கச் செலவுமாத்திரம் வழக்காளிகளுக்கு எதிராளிகள் கொடுக்கும்படி தீர்வையிற் கூறப்பட்டது

## ஆடி அமாவாசை.

இந்த ஆகஸ்ட்௴ 15-ம்௳ புதன்கிழமை ஆடி அமாவாசை நிகழுவதால் அத்தினம் அரசாங்க விடுதலை நாளாகவிருக்குமென வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது

## சுப்பிறீம்கோட்டு நீதிபதி.

மிஸ்டர் H. A. P சந்திரசேகர அவர்கள் சென்ற ஜூலை௴ 30-ம்௳ தொடக்கம் செப்டெம்பர்௴ 17-ம்௳ வரைக்கும் கொழும்பில் சுப்பிறீம்கோட்டுக் கிறிமினல் விசாரணை நீதிபதியாகக் கடமை பார்க்கும்படி மறுபடியும் நியமனம் பெற்றிருக்கின்றனர்.

## நயினாதீவு சங்கு குளிப்பு.

வழக்கம்போலவே கிழைக்கரைச் சேரனகர் நயினாதீவுக்கடலிலே சங்கு குளிக்க வந்திருக்கின்றனர். குழப்பம் நேரிடாது காப்பதற்குக் கச்சேரி உப ஏசண்டர் மிஸ்டர் W. A D சில்வாவும் பொலீசரும் அங்குச் சென்றிருக்கிறார்கள். குளிப்பு மூன்றுமாசத்துக்கு நடைபெறும்.

## சுப்பிறீம்கோட்டு விசாரணை.

ஏழாவதாக, சுன்னாகத்திலுள்ள சபாபதி தம்பிராசாவைச் சென்ற மேய்௴ 19-௳ இரவு வேலுப்பிள்ளை கார்த்திகேசுவும், சிவசிதம்பரம் செல்லையாவும் கொலைசெய்தார்களெனக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்குவிளங்கப்பட்டது இதில் எதிரிகள் சுத்தவாளிகளாகக்காணப்பட்டு விடுதலையடைந்தனர்.

## வடபகுதி வித்தியாதரிசி.

வடபகுதி வித்தியாதரிசியாகும் மிஸ்டர் H. S. பெறிறு அவர்கள் இந்த ஆகஸ்ட்௴ 18-ம்௳ இங்கிலாந்திற்குப் பிரயாணமாவர். 10-ம்௳ வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் அரசினர் விடுதிச்சாலையில் அவருக்கு விருந்தளித்து உபசரிப்பார்கள். இந்த௴ 12௳ யாழ்ப்பாணத்தை விட்டுப் புறப்படுவார்.

## மகோற்சவ விஞ்ஞாபனம்.

ஸ்ரீ முன்னேஸ்வர மகாக்ஷேத்திரத்திலெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னைநாத சுவாமிக்கு நிகழும் விபவ௵ ஆடி௴ 20-ம்௳ முதல் ஆவணி௴ 15-ம்௳ வரைக்கும் மகோற்சவம் நடைபெறும். ரதோற்சவம் ஆவணி௴ 14-ம்௳யும், தீர்த்தோற்சவம் ஆவணி௴ 15-ம்௳யும் நிகழும்.

## திப்பாய்தல்.

உடப்பு, திரௌபதி அம்மன்கோவிலில் இந்த ஆடி௴ 21௳ துவஜாரோகணமாகி உற்சவங்கள் நடைபெறும். அத்தருணம் வருடாவருடம் நடைபெறும், தீப்பாய்தல், இந்த வருடம் ஆவணி௴ 7௳ புதன்கிழமை 3 மணி தொடக்கம் 6 மணிவரையும் நிகழும். அப்பொழுது ஆயிரக்கணக்கானோர் தீயில் நடந்து செல்வார்கள்.

—கடிதம்.

## சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை.

நிகழும் விபவ ஆண்டு ஆடித்திங்கள் கடைம் 25-7-28) நாளாகிய புதன்கிழமையன்று மாலை ஆறரை மணியளவில் கண்டித் தமிழ்மண்டபத்தில் ஸ்ரீ சு. சிவவாசகம் அவர்கள் உபயமாகச் சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை மிகவும் சிறப்பாக நிகழ்த்தப்பெற்றது. பூசை முடிந்த பின்னர் ஸ்ரீ சோம. சரவணபவன் அவர்கள் நாயனார் சரித்திரத்தைக் குறித்தோர் அரிய பிரசங்கஞ் செய்தனர். யாவரும் விபூதிப் பிரசாதம் முதலியன அணிந்து நிவேதன மருந்தியபின்னர் கொண்டாட்டம் 9 மணியளவில் நிறைவெய்தியது.

—கடிதம்.

## நெடுந்தூரம் பிரயாணஞ்செய்த பறவை.

பிறந்து இதே நாளான ஒரு பறவையைக் கழுத்தில் அடையாளங்கட்டி வட அமெரிக்காவிலுள்ள லாப்ராடார் நாட்டிலிருந்து பறக்கவிட்டார்களாம். அது மூன்றாவது மாதத்தில் பிரான்சு தேசத்திலுள்ள ஈசாறி என்னுமிடத்தில் காணப்பட்டதாம். அட்லாண்டிச் சமுத்திரத்தின் மேல் 4200 மைல் தூரம் பறந்து அங்கு அவ்விடம் வந்திருக்கவேண்டும்.

## நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வழக்கு.

:O:

மேற்படி கோயில் வழக்கு விசாரணை சென்ற ஜூலை௴ 16௳ திங்கட்கிழமையும், 17௳ செவ்வாய்க்கிழமையும், 18௳ புதன்கிழமையும் யாழ்ப்பாணம பெரிய நீதித்தலத்தில் (டிஸ்திறிக் கோட்டில்), நீதிபதி மிஸ்டர் J. C. W. றொக் முன்னிலையில் நிகழ்ந்தது.

1-ம் பிரதிவாதியாகிய
ஸ்ரீ இராசநாதமாப்பாணமுதலியார்
கூறியவை.

(முற்றொடர்.)

ஊரவர்களுடைய உதவியிருந்தால் தமக்கு நன்மையாயிருக்குமென்று உமது தகப்பனார் நினைத்திருக்கக் கூடுமோ?—இல்லை.

டாக்குத்தர் கந்தையாவுக்கு மாறாகத்தான் ஊரவர்களுடைய உதவியைப் பெறவேண்டுமென்று உம்முடைய தகப்பனார் முயற்சி செய்யவில்லையா?—அப்படியில்லை; டாக்குத்தர் கந்தையா சில துஷ்டர்களைச் சேர்த்து அவர்களுக்குக் குடிக்கக்கொடுத்துக் கலகம் விளைக்க வேண்டுமென்று முயற்சி செய்த பொழுது எனது தகப்பனாரும் தமக்குத் துணையாகச் சிலரை வைத்திருந்தார்;

உம்முடைய தகப்பனார் கோயிலடியில் கலகத்திற்காக ஆட்சேர்த்ததுண்டா?—டாக்குத்தர் கந்தையா என்னுடைய தமயனாரிடமிருந்து கோயிலின் திறப்பைப் பறிப்பிக்க முயற்சி செய்தார், அதனாலே என் தகப்பனாரும் தமயனாரும் கோயில் கும்பிடவந்தவர்களை, அயலவர்கள் ஆகிய இவர்களைத் தங்களுக்குத் துணையாகச் சேர்த்தார்கள்;

அப்படித் துணையாக நின்றவர்களில் விதானை கமலியாயம் ஒருவரல்லவா?—விதானை கமலியாயம்போற் கோயில் கும்பிட வந்தவர்களிலும் வேறு எத்தனையோ பேருண்டு;

விதானை உங்களோடு சிநேகம் அல்லவா?—அவர் அதிகமாக எங்கள் வீட்டிற்கு வருவதுண்டு;

காவலருடைய மருமகன் பொன்னம்பலபிள்ளையும் உங்களோடு சிநேகமல்லவா?—அதைப்பற்றி எனக்குத் தெரியாது!

வேலுப்பிள்ளை உடையார்?—அவர் சிநேகமென்பதைப்பற்றித்தெரியாது; ஆனால் அயலவர்;

கனகசபாபதிஐயரை உமக்குத்தெரியுமா?—ஆம்;

எதுங் கூட்டங்களுக்கு அவரைக் கொண்டல்லவா உமது பிதா விஞ்ஞாபனங்களை எழுதுவிப்பது?— என்தகப்பனார் அப்படி ஒரு கூட்டமுங் கூட்டவில்லை;

கோயிலில் ஏதும் கூட்டம் கூட்டப்படும் பொழுது அந்த ஐயர் விஞ்ஞாபனம் எழுதுவதுண்டல்லவா?—எனக்குத்தெரியாது;

பொன்னம்பலபிள்ளை மேடி கோயிலில் புராணப் படிப்புக்கு இடையிடையே வந்தவரல்லவா?—வந்ததுண்டு;

அவர் உம்முடைய பிதாவோடு சிநேகமல்லவா?—நானறியேன்;

1892-ம்௵ உமக்கென்ன வயதிருக்கும்; மூன்று நாலு வயதிருக்கும்;

ஆனபடியால் அக்காலத்திலே இந்தக் கோயில் விஷயமாகக் கூட்டம் கூடினது கூடாததைப்பற்றி உமக்குத் தெரியாதென்று நினைக்கிறேன்?—நான் அதைப்பற்றிச் சொல்லவில்லை; பொன்னம்பலபிள்ளைபுராணபடனஞ் செய்தற்கு வந்ததையிட்டே சொன்னேன்;

1892-ம்௵ கோயில் விஷயமாக ஏதும் கூட்டம் கூடியதைப்பற்றி உமக்குத் தெரியுமா?—இல்லை;

1902-ம்௵ கோயிலில் ஏதும் திருப்பணிகள் புதுக்குவித்ததுண்டா?—அந்த வருஷத்தில் என்தாயாருடைய தகப்பனார் சில திருத்தங்கள் செய்வித்தவர்;

1902-ம்௵ ஒரு கும்பாபிஷேகம் நடந்ததுண்டா?—எமது தகப்பனார் காலத்திலும் ஒரு கும்பாபிஷேகம் நடந்ததுண்டு.

உமது தகப்பனார் அக்காலத்திற கும்பாபிஷேகத்திற்கு வரும்படி ஊரவர்களுக்கு ஒரு விஞ்ஞாபனம் விடுத்ததுண்டா?—இருக்கலாம்.

உமக்குத் தெரியவேண்டும்; கேள்விகளுக்கு விலத்தி மறுமொழி சொல்லக்கூடாது (ஒரு விஞ்ஞாபனத்தைக் காட்டி இதற்கு உம்முடைய தகப்பனாரும் தமயனாரும் கையெழுத்திட்டிருக்கிறார்களல்லவா? இப்பொழுது தெரிகிறதல்லவா?—ஆம்.

இந்த விஞ்ஞாபனத்திலே கந்தசுவாமிகோயில் ஆதியிற புவனேகவாகுவினாற் கட்டுவிக்கப்பட்டதென்று காட்டப்பட்டிருக்கின்றதல்லவா?—ஆம்.

முதல் அவரால் கட்டப்பட்டது, பின்னர்த்தானே (பறங்கியரால்) இடிக்கப்பட்டது?—ஆம்.

பறங்கியரால் இடிக்கப்பட்ட பின்னர்த்தான் இக்கோயில் அந்நிலையத்தில் இராசநாதமாப்பாண முதலியாரால் கட்டப்பட்டது?—ஆம்.

இதில் ஒருதவறுமில்லை?—இல்லை; இராசநாதமாப்பாணர் அந்த நிலையத்தை விலைக்கு வாங்கிப் பின் கோயிலைக்கட்டுவித்தார்.

யாரிடம் வாங்கினார்?—கொழும்பிலே ஏதோ ஒழுங்குசெய்து இந்த நிலத்தை வாங்கினார் என நான்கேள்வி.

என்ன, ஆரும் தருமசாதனஞ்செய்ததா?—இல்லை, விலைக்குவாங்கியது.

இந்த விஞ்ஞாபனத்திலே ஊரவர்கள் இயன்ற பொருளுதவி செய்யவேண்டுமென்று காட்டப்பட்டிருக்கின்றதல்லவா?—இல்லை.

(விஞ்ஞாபனத்தைப் பிரதிவாதியிடங் கொடுத்து) இதிற் சடைசிப்பிரிவிற்கு மேலே என்ன பிரிவைப் படித்துப்பாரும்?—(பிரதிவாதி படித்துப்பார்த்து) அப்படியொன்றுமில்லை.

இந்த விஞ்ஞாபனத்தில் உமது பிதாவும் தமயனும் தங்களை ஆதீனகர்த்தர் என்று வெளியிட்டிருக்கிறார்களல்லவா?—ஆம்.

அதன்கருத்தென்ன?—சொந்தக்காரர்.

நியாயவாதி சென்னைச்சர்வகலாசங்கத்தார் வெளியிட்டுவரும் தமிழகராதிப்பிரதியொன்றைப் பிரதிவாதிகையிற்கொடுத்து, இதில் ஆதீனகர்த்தர் என்பதற்கு என்ன அர்த்தம் எழுதப்பட்டிருக்கிறதென்று பாரும்?—"ஒரு சைவமடத்தின் தலைவர்" ஆனால் இது இந்தியாவில் வழங்கும் அர்த்தம்; யாழ்ப்பாணத்திலே "சொந்தக்காரர்" என்பதே வழக்கு.

உமது மூதாதைகளெல்லாரும் ஆதீனகர்த்தர் அல்லது மணியம் என்றே எழுதிவந்தார்களல்லவா?—ஆம்.

இந்தவிதமான சில விஞ்ஞாபனங்களில் தருமகர்த்தா என்றுங் காணப்படுகின்றதல்லவா?-

(இந்தச்சந்தர்ப்பத்தில் நியாயவாதி ஒரு சாதனத்தைப் பிரதிவாதிக்கு எடுத்துக்காட்டி இதில் உமது தகப்பனார் சங்கரப்பிள்ளையென்பவர் தம்மைத் "தருமகர்த்தா" அல்லது "பராபரிப்புக்காரன்" என்று எழுதியிருக்கிறாரல்லவா? இவர்கள் இப்படி எழுதியிருப்பதன் கருத்தென்ன?—தருமகர்த்தா என்பது பெரும்பான்மையும் ஊரவர்கள் கொடுக்கும் தருமப்பொருளைப் பரிபாலிப்பவர் என்னுங் கருத்துப்படும்; பராபரிப்புக்காரன் என்றால் அதிபர் எனப்பொருள்படும்; சிலர் இச்சொற்களுக்கு முறையே சொந்தக்காரர் அதிபர் என்றும் பொருள் கொள்ளுகிறார்கள்.

இந்தவை உறுதிகள் ஒன்றிலாயினும் உமது தகப்பனார் இன்றேற் தமயனார் "சொந்தக்காரர்" என எழுதவில்லையா?—அவர்கள் கோயிற்சொந்தக்காரரும் கோயிற் பொருள்களைப் பரிபாலிப்பவர்களுமாவர்.

கந்தசுவாமிகோயில் ஒருவருடைய சொந்தமென்று நீர் சொல்லுகின்றீர்?—ஆம்; எங்கள் முன்னோர்கள் வழிபடுதற்காகக் கட்டுவித்த கோயில்;

டொன்சுவான்மாப்பாணமுதலியார் மானிப்பாயைச் சேர்ந்தவரல்லவா?—ஆம், ஆனால் அவர் கல்யாணம் முடித்தது மட்டுவிலிலாகும்.

அப்படியானால் நல்லூரில் ஏன் இந்தக்கோயிலைக் கட்டுவித்தார்?—அவர் நல்லூரில் வசித்தாரென்றும் அதனாற்றான் அங்கே கோயிலைக் கட்டுவித்தாரென்றுங் கேள்வி.

கந்தையா மாப்பாணருடைய ஆதனங்களுக்கு உரிமைத்தத்துவ மெடுத்ததா?—கந்தையா மாப்பாணருடைய சொந்த ஆதனங்களுக்கு உரிமைத் தத்துவம் எடுத்திருக்க வேண்டுமென நினைக்கிறேன்; கோயிலாதனங்கள் எங்கள் குடும்பம் முழுவதற்குமுரிய தருமச் சொத்தாதலால் அவைகளுக்குத் தத்துவம் எடுக்கவில்லை.

ஆறுமுக மாப்பாணருடைய ஆதனங்களுக்கு உரிமைத்தத்துவ மெடுத்தாய்விட்டதா?—ஆம்.

கோயிலாதனங்கள் அதிற் சேர்க்கப்படவில்லையா?—இல்லை.

உரிமைத் தத்துவவழக்கிலும் உம்மைக் கோட்டில் விளக்கியதல்லவா?—ஆம்.

நீங்களும் உரிமைத் தத்துவத்திற் கோயிலாதனத்தைச் சேர்க்கவில்லையா?—தருமச் சொத்தானபடியாற் சேர்க்கவில்லை.

கோயில் தருமப்பொருள் வகுப்பைச் சேர்ந்ததென்று முந்திச் சொன்னீரே?—இல்லை, அது சொந்தப்பொருள்; சிலருடைய சொந்த வணக்கத்திற்காகக் கட்டப்பட்டது.

ஆனால் ஆதியிற் கோயில் பொதுக்கோயிலாகத்தான் கட்டப்பட்டதல்லவா?—இல்லை.

பொதுக்கோயிலென்ற எண்ணத்தினாற்றானே ஊரவர்கள் ஏதுந் தானஞ்செய்து வந்தார்கள்?—இல்லை.

1916-ம் ஆண்டிற்கு முந்திக் கோயிற் பரிபாலனத்தைப்பற்றி ஒரு உறுதியுமில்லையல்லவா?—ஒரு உறுதி முந்தியிருந்தது; ஆனால் இப்பொழுது எங்கள் வசமில்லை.

நீதிபதி: என்ன உறுதி?—கோயிலிருக்கும் நிலத்தைப்பற்றிய உறுதி.

ஸ்ரீ துலசிங்கம்:

கோயிற் பரிபாலனத்தைப் பற்றிய முதல் உறுதி உம்முடைய தாயாரால் 1916-ம் ஆண்டு முடிக்கப்பட்டதா?—ஆம், தாயாரும், தமயனுஞ் சேர்ந்து முடித்த உறுதியாகும்.

தருமப்பொருட் பரிபாலனத்தைப் பற்றிய பிரமாணம் வந்ததையிட்டுப் பயந்துதானே அவர்கள் அந்த உறுதியை முடித்தார்கள்?—ஆம்? அப்படித்தான்; கோயில் எங்கள் குடும்பத்திற்குரிய தருமப்பொருள்; அந்த விவகாரங்களுட் பிறர் பிரவேசிப்பது பிரியமில்லை.

அதற்குப் பின்புதான் நீர் நியாயவாதிகளோடு யோசித்து 1916-ம் ஆடு எழுதிய உறுதி போதிய பெலப்புடையதல்லவென்று அறிந்தீரா?—இல்லை நானப்படி நினைக்கவில்லை.

பிறரைக் கோயில் விவகாரங்களிற் பிரவேசியாது தடுப்பதற்குக் குறித்த உறுதி போதியதாகும் என்று நினைக்கிறீரா?—அப்படி என்றுதான் நினைக்கின்றேன்.

இந்தக் கோயிலுக்கு நீங்கள்தான் சொந்தக்காரரென்று உறுதியிலே எடுத்துக் காட்டப்படவில்லையே?—அவைகளைப்பற்றி எனக்குத் தெரியாது.

1921-ம் ஆடு உமது தாயார் பின்னரும் ஒரு உறுதி முடித்தாரல்லவா?—ஆம்.

அதிலே உம்மையும் உமது தமயனாரையும் வெடி கோயிலில் ஒருமித்த அதிகாரிகளாகக் காட்டப்பட்டிருக்கிறதல்லவா?—ஆம்.

அந்த உறுதியிலே உங்கள் இருவரையும் சொந்தக்காரர் என்று சொல்லப் பட்டிருக்கிறதல்லவா?—இருக்கலாம்;

நீதிபதி:- குறித்த உறுதியிலே "தருமத்திற்கும் மற்றும் நியக்கினைகளுக்குமமைய" என்பதின் கருத்தென்ன?—

(இந்தச் சமையத்தில் மிஸ்டர் ஹெயிலி பிரதிவாதி ஆங்கிலம் அறியாதவராதலாலும், உறுதி ஆங்கிலத்திலிருப்பதாலும் இந்தக் கேள்வி கேட்பது சரியல்லவென ஆக்ஷேபித்தனர்.)

நீதிபதி:- இந்தச் சொற்கள் குறித்த உறுதியிலிருப்பது உமக்குத் தெரியுந்தானே? அவற்றின் கருத்தென்ன?—எனக்குத் தெரியாது.

ஸ்ரீ துலசிங்கம்:—ஊரவர்கள் கோயில் தங்களுக்கு உரிமையுண்டென்று இதற்கு முன் சொல்லவில்லையென நீர் சொன்னீரே?—நான் சொன்னது இந்தக் கருத்திலல்ல;

பின் எந்தக் கருத்தில்?—எங்களுடைய இனத்தவர்களல்லாமற் பிறர் உரிமைக்கு வரவில்லையென்பதே நான் சொன்னது;

கோயிற் பராபரிப்பைப்பற்றியல்ல?—கோயில் விஷயங்களைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று பிறர் முன்னொருபோதும் வெளிப்படவில்லை;

நீரும் உம்முடைய முன்னோரும் பிராமணர்களோடு வழக்குப் பேசியிருக்கிறீர்களல்லவா?—ஆம்;

கட்டியத்திலே புவனேகவாகுவின் பெயரும் சொல்லப்படுகிறதல்லவா?—ஆம்;

ஏன் அவருடைய பெயர் சொல்லப்படுவதென்பதை இங்கே விளங்கப்படுத்தவும்?—கட்டியஞ் சொல்லும்பொழுது முதல் தெய்வங்களைக் குறித்தும், பின்னர் அரசனைக் குறித்தும், பின்னர் கோயிலதிகாரியைக்குறித்தும், அதன்பின்னர் அன்பர்களைக் குறித்தும் சொல்வது வழக்கம்.

இவர்களுள் புவனேகவாகு எவரெனவைத் தெண்ணப்படுவர்?—கோயில் இப்பொழுதிருக்கிற ஸ்தானத்திலேயே ஆதியில் புவனேகவாகு ஒருகோயிலை யமைப்பித்தவர்; அந்தத் தொடர்புபற்றித்தான் சொல்லப்படுகிறது.

ஆறுமுகநாவலர் சைவசமயத்தைப் பெரிதும் விருத்தி செய்தவரல்லவா?—அப்படித்தான் சொல்லுகிறார்கள்.

அவர் கல்வியிற் சிறந்தவரல்லவா?—ஆம்.

நீரிமலையிற் சிவன்கோயில்கட்டுவதற்கு நாவலர் காரணமாயிருந்தவரல்லவா?—நான் அதைப் பற்றிக் கேள்விப்படவில்லை.

நாவலருக்குக் குருபூசை செய்யப்படுவதல்லவா?—அவர் ஸ்தாபித்த பள்ளிக்கூடங்களிலே செய்யப்படுகிறது.

அவரிடத்திற் சொந்தப்பணமில்லையென்பது உமக்குத் தெரியுமல்லவா?—ஆறுமுகநாவலர் ஒரு மடத்திலே இருந்தார்; கொஞ்சக் கருங்கற்களையும் குவித்திருந்தார்; கோயில்கட்டுவதற்காக ஊரவர்களிடமிருந்து பொருளுஞ் சேர்த்தார்; அதனால் அவர் அந்த மடத்தை விட்டுப் போகும்படி கேட்கப்பட்டார்.

குறித்த கோயிலில் தாசியர் நடனம், ஆடுவெட்டுதல் முதலிய துர் வழக்கங்களை உங்கள் முன்னோர் அநுசரித்தார்களென்ற காரணம் பற்றி நாவலரவர்கள் அவர்களுடன் பிணக்குப்பட்டுக்கொண்டு போனாரென்பது உண்மையல்லவென்றா சொல்லுகிறீர்?—ஊரிலே அப்படித்தான் சொல்லுகிறார்கள்.

நீர் ஒரு பெரிய மணியைத் தருவித்து அதற்காகிய ஒரு பெரிய மணிக்கோபுரமும் இப்பொழுது கட்டுவிக்கிறீரல்லவா?—ஆம்.

அந்த மணியின் விலை யென்ன?—4500 ரூபா; கோயிற் காசில்தானா எடுத்துக்கொடுத்தீர்?—எனது மனைவி கொடுத்த பொருள், சகோதரி தாயார் இவர்கள் தந்த பொருள்; கோயிற் பொருளுங் கொஞ்சமுண்டு.

அந்த மணியிலே அது உம்மால் செய்விக்கப்பட்டதென வரைந்திருக்கின்றதாமே?—ஆம்.

கோயிற் பொருளை யெடுத்து இப்படிப்பட்ட விஷயங்களுக்காக உமது தமயனாருஞ் செலவிட்டிருக்கிறாரா?—சில விஷயங்களைக் கோயிற்பொருள் கொண்டும், சில விஷயங்களைத் தமது சொந்தப்பொருள் கொண்டும் அவர் செய்வித்திருக்கிறார். ஆனாற்கோயிற் பொருள் கொண்டு செய்வித்ததெது, சொந்தப்பொருள் கொண்டு செய்வித்ததெது என்பதைப்பற்றி எனக்குத்தெரியாது,

ஆறுமுக மாப்பாணரும் சில சில திருப்பணிகளைத் தாம் செய்வித்ததென்று காட்டியிருக்கிறார்; உதாரணமாக, முந்திய மணிக்கோபுரத்திலே தம்மால் கட்டுவிக்கப்பட்டதென்று எழுதியிருக்கிறாரல்லவா?—ஆம்;

உள்வீதிச் சுவரிலே அந்தவீதி வேலைமுழுவதும் ச. ஆறுமுகமாப்பாண முதலியாரால் செய்யப்பட்டது என்னுங் கருத்துப்பட எழுதப்பட்டிருக்கின்றதல்லவா?—ஆம்;

ஆனால் இவைகள் கோயிற்பொருள் கொண்டுதானே செய்யப்பட்டன?—தன்னுடைய சொந்தப்பொருள் கொண்டும் கோயிற் பொருள் கொண்டும் இவைகளைச் செய்வித்தார்; ஒரு கோயிலைப் பரிபாலிப்பவர் ஏதும் ஒரு கருமத்தைக் கோயிலில் நிறைவேற்றும் பொழுது தாம் செய்ததாகச் சொல்லுவதும் எழுதுவதும் வழக்கந்தானே;

ஆனால் அவர் தம்மை ஆதீனகர்த்தாவென்று சொல்லுகிறாரோ?—ஆம்;

சந்நிதில், மிஸ்டர் ஹெயிலியின் கேள்விகளுக்கு அவர் பதில் கூறியது.

ஊரவர்களால் கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட பொருளை நீரும் உமது முன்னோரும் கோயிலுக்குச் செலவிடுவதைப்பற்றி ஆதலையால் ஊரவர்கள் உங்களுடன் ஆட்சேபம்பண்ணியிருக்கிறார்களா?—இல்லை; குமாரசாமிக் கணக்கர் என்றொருவர் மாத்திரம் எங்களுக்கு மாறாக ஒரு வழக்குத் தொடுத்திருந்தார்; அவர் இந்த வழக்கில் முன்ன வழக்காளிகளில் ஒருவராகிய சுவாமிநாதருக்கு உறவினர்;

நான் அவைகளைப்பற்றிக் கேட்கவில்லை; கோயிலுக்குத் தாங்கள் தந்த பொருள்களைப்பற்றி உங்களோடேதும்வழக்காடினார்களா?-இல்லை.

சிலகாலத்திற்கு முன்னர் கணபதியார் பேரம்பலமென்பவர் உமக்கு மாறாக ஒரு வழக்குத் தொடர்ந்தாரென்று சற்று முன்பாக இங்கே கேட்டார்களல்லவா?—ஆம்;

நீர் ஒருமடத்தில் ஒருபகுதியை இடிக்கவேண்டியிருந்ததல்லவா?—ஆம்;

மடத்தை இடித்தது எதற்காக?—தீர்த்தக்குளம் தோண்டுவித்தற்காகவும், அதற்கு நாற்புறத்தும் மண்டபங்கள்கட்டுவதற்காகவுமாம்.

அது பெரிய குளமா?—ஆம்; மண்டபங்களும் மிகப் பெரியன.

சிலசில காலங்களிலே திருவிழா குளத்தைச் சுற்றிவருவதா?—ஆம்; தீர்த்தோற்சவத்திற்காகவே அந்தக் குளம் தோண்டப்பட்டது.

குறித்த வழக்காளி (கணபதியார் பேரம்பலம்) உங்கள் முன்னோரிடமிருந்து மடங் கட்டுவதற்கான நிலத்திற்குக் குத்தகை எடுத்திருந்தாரா?—ஆம்; கந்தையாமாப்பாணரிடமிருந்து குத்தகைக்கு வாங்கினார்.

கோயிற் சொந்தக்காரன் பரிபாலிப்பவர் என்ற அதிகாரத்திற்றானே கந்தையாமாப்பாணர் குத்தகை யெழுதிக் கொடுத்தார்?—ஆம்.

அந்தவழக்கில், சுப்றீங்கோட்டார் நீர் கோயிலின் நன்மையையிட்டுத்தான் செய்தீரென்றும், ஆனாற் கோட்டாரிடமிருந்து அதை இடிப்பதற்கு அநுமதி பெறதிருக்கவேண்டியது உம்முடைய கடமையென்றுந் தீர்ப்புச் செய்திருக்கின்றாரல்லவா?—ஆம், அப்படித்தான்; ஆனால் எழுதப்பட்டிருந்த குத்தகை உறுதியைப்பற்றி எனக்கு முந்தித் தெரியாது.

முந்திய வழக்குப் பிரதிகளொன்றைப் பார்த்தபோது ஒரு பிரதியிற் சுப்பையருக்கு ஏதோ ஒரு அநுமதிப் பத்திரமொன்று கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னீர்?—ஆம்.

நீதிபதி. அது என்ன அநுமதிப் பத்திரம்?—முந்திய வழக்குப் பிரதிகளில் ஒன்றை நான் வாசித்துப்பார்த்தபோது சுப்பையருக்கு ஒரு அநுமதிப்பத்திரங்கொடுத்திருப்பதாக அதிற் கண்டேன்.

மிஸ்டர் ஹெயிலி. அநுமதி எதற்கு? கோயில் கட்டுவதற்கா? அல்லது கோயில் மனேஜராயிருப்பதற்கா?— எதற்கென்பது சரியாகத் தெரியவில்லை. தகப்பனருக்கும் பிராமணருக்குமிடையில்நடந்த வழக்குப் பிரதியொன்றைப் படித்தபோது பிராமணர் தங்களுக்கு ஏதோ உரிமை யுண்டென்று சாதித்திருக்கக் கண்டேன்.

நீதிபதி: அநுமதி எதற்கென்று சொல்ல முடியாதா?—பூசை பண்ணுவதற்கென்று நினைக்கிறேன்.

என்ன! பூசை செய்பவராக நியமித்தற்கா?—அப்படித்தானிருக்கக்கூடும்.

கோயில் கட்டுவதற்கு அநுமதியல்ல?—இல்லை.

மிஸ்டர் ஹெயிலி: கோயில் கட்டுவதற்குச் சுப்பையருக்கு ஒரு அநுமதிப்பத்திரங் கொடுக்கப்பட்டதையிட்டு நீர் ஏதும் அறிவீரா? இந்த வழக்கிலே வழக்காளிகள் சொல்லத்தான் கேட்டிருக்கிறேன்.

அதை நேரிற் கண்டீரா அல்லது பிறர் சொல்லக் கேள்விப்பட்டீரா?—இல்லை.

தோணியின் செலவென்ன? 60,000 ரூபா தானா?—60000 ரூபாவும் தோணி செய்வித்த காசல்ல; இரண்டொருமுறையில் தோணிப் பிரயாணச் செலவும் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும்.

உண்மையாகத் தோணிக்கு முடிந்த பண மெவ்வளவு?—அதைப்பற்றி எனக்குத் தெரியாது; தமையனாரே செய்வித்தவர்.

கருங்கல் ஏற்றுகிறதற்காக அது செய்விக்கப்பட்டதென்றுசொன்னீரே; கருங்கல்எதற்கு?—கோயில் கட்டுவித்தற்கு.

அப்படியானாற் கூலிக்கு ஒருகப்பலைப் பிடித்துக் கருங்கல் ஏற்றுவதற்குப் பதிலாக ஒரு கப்பலை ஏன் புதிதாகச் செய்விப்பான்?—கருங்கல் ஏற்றினால் கப்பல் பழுதடைந்துவிடுமென்று கூலிக்குவிட எல்லாரும் மறுத்துவிட்டார்கள்.

இந்தத் தோணியில் எப்பொழுதாயினும் கருங்கல் ஏற்றி வந்ததுண்டா?—ஆம்.

அவைகள் இப்போ எங்கே?—குவித்து வைக்கப்பட்டிருக்கின்றன.

எந்த இடத்திலே?—கோயிலுக்குரியநிலத்திலே.

அந்தத் தோணியின் செய்தி என்ன?—கடனுக்காக விலைப்பட்டுப்போய்விட்டது.

ஆர் பட்ட கடனுக்கு?—ஆறுமுக மாப்பாணர் பட்ட கடனுக்கு.

அவர் ஆரிடத்திற் கடன்பட்டவர்? — சோம. செட்டி கடையிலும், மழவராயர் கந்தையாவிடத்திலும்.

தோணி விலைப்பட்டது ஆறுமுக மாப்பாணர் காலத்திலா, அவர் இறந்தபின்பா?—இறந்த பின்பு.

உரிமைத் தத்துவ வழக்கில் உரிமைத் தத்துவகாரியிடம் தங்கள் கடனைக் கேட்டார்களா?—ஆம்.

எதற்காகக் கடன்பட்டவர்?—அவர் கோயிற் பொருளைக்கொண்டு கற்கள் உடைப்பிக்கத் தொடங்கினார்; கோயிற் பணம் போதாமை கண்டு அரு. அரு. சோம. செட்டி கடையில் கடன் பட்டுக் கப்பல் செய்வித்தார்; அதன் பின்னர் கற்கள் இருந்தும் விடுவளவையும் ஈடுவைத்தார்.

தோணியிற்றகாக உங்கள் சொந்தக்கடனுக்குக் கொடுக்கப்படவில்லையா?—இல்லை; இவைகளெல்லாம் கோயிலுக்காகப் பட்ட கடன்; தோணி எனது தமையனார் பேரில் இருந்தபடியால் கடன்காரர் வழக்கிட்டு விற்றுவிட்டார்கள்.

நீதிபதி. யாழ்ப்பாணத்தில் ஏதும் சைவமடங்களுக்குரிய சாதனங்களுண்டா?—இல்லை.

இலங்கையிலே ஆதீனகர்த்தர் என்றதின் கருத்தென்ன?—இலங்கையிலே வழங்குகிற கருத்து எனக்குத்தெரியாது; யாழ்ப்பாணத்திலே ஒன்றின் சொந்தக்காரன் என்பதே கருத்து;

நீதிபதி. நான் சிலகேள்விகள் உம்மைக்கேட்க விரும்புகிறேன்; இரகுநாதமாப்பாணர் கிறீஸ்தவர் என்று சொன்னீரல்லவா?—ஆம்.

ஆங்கிலேயர் இங்கே வந்த பின்பு வெடி மாப்பாணர் சைவரானார் என்று சொன்னீரல்லவா?—ஆம்;

அவர் கொழும்புக்குப் போய்க் கோயில் கட்ட உத்தரவு பெற்றாரென்றும் அந்த உத்தரவுப் பத்திரம் டாக்குத்தர் கந்தையாவிடம் அகப்பட்டு விட்டதென்றும் குறித்த டாக்குத்தர் அதைப் பிராமணர்வசம் கொடுத்துவிட்டாரென்றுஞ் சொன்னீரல்லவா? அப்படிச் சொன்னது முழுவதும் சரியா?—குறித்த மாப்பாணர் கொழும்புக்குப்போனாரென்றும் அங்கே அநுமதி பெற்றுக்கொண்டு வந்து கோயில் கட்டுவித்தாரென்றுந்தான் நான் சொன்னேன்;

டாக்குத்தர் கந்தையாவிடம் அகப்பட்ட அநுமதிப்பத்திரம் எது?—இந்தக்கோயில் இருக்கும் நிலத்தை, குறித்த மாப்பாணர் பணங் கொடுத்து வாங்கினார் என்பதைப்பற்றியேயாகும்.

சுப்பையருடைய அநுமதிப்பத்திரமொன்றை டாக்குத்தர் கந்தையா பிராமணரிடங் கொடுத்தாரென்று சொன்னீரே; அது எது?—நான் அநுமதிப் பத்திரமென்று சொல்லவில்லை; எல்லா உறுதிகளும் சாதனங்களும் டாக்குத்தர் கந்தையாவிடம் அகப்பட்டுப் போயின என்றும், அவர் சிநேகத்தினாலே பிராமணர்வசம்கொடுத்துவிட்டாரென்றுமே நான் சொன்னேன்.

சுப்பையரிடத்தில் ஒரு அநுமதிப்பத்திரம் இருந்ததென்பதைப்பற்றி நீர் கேள்விப்பட்டதுண்டா?—இந்தப்பிராமணர் சொல்லக் கேள்விப்பட்டேனே யல்லாமல் அதற்கு முன் கேள்விப்படவில்லை;

அப்படிக் கேள்விப்பட்டது இந்த வழக்குத் தொடங்கமுந்தியா?—முந்தி.

என்ன கேள்விப்பட்டீர்?—பிராமணர் தங்களுக்கும் கோயிலில் உரிமையுண்டு எனச் சொல்லித்திரிகிறார்களென்று எனக்கு வந்து சிலர் சொல்லக் கேள்விப்பட்டேன்.

கோயில் கட்டுவதற்காகிய அநுமதிப்பத்திரம் வைத்திருந்தார்களா?—இல்லை.

நீர் கேள்விப்பட்டதென்ன?—பிராமணர் தங்களுக்குக் கோயில் உரிமையுண்டென்றும் அதனால் வழக்குத் தொடரப்போகின்றார்களென்றுங் கேள்விப்பட்டேன்.

கோயில்கட்டுவதற்காகியஅநுமதிப்பத்திரந்தங்களிடத்தில் உண்டு என்று அவர்கள் சொல்லவில்லையா?—இல்லை; அப்படிச்சொல்ல நான் கேள்விப்படவில்லை.

மெயிட்லன்ட் தேசாதிபதி சுப்பையரைப் பிரதானமான பூசகராக நியமித்தாரென்ற சாதனத்தை நீர் நேரிற்கண்டதுண்டா?—ஆம்;

உமது முன்னோர் தாமோதரம்பிள்ளை யென்பவரைப் பற்றி இலங்கைத் தேசாதிபதிக்கு ஒரு மனுப்பத்திரம் அனுப்பியதை யிட்டு நீர் அறிவீரா?—ஆம்.

அந்தக்காலத்தில் உமது முன்னோருக்கும் பிராமணருக்கு மிடையிற் பிணக்கிருந்ததென்பதைப்பற்றி அறிவீரா?— குறித்த மனுப்பத்திரத்திற்கு எழுதிய மறுமொழியைக்கொண்டு பிணக்கு இருந்ததென்று அறியலானேன்.

குறித்த நியமனத்தினால் ஏதும் நன்மை யுண்டென்று சொல்லுகிறீரா?— கோயிலிலே சுப்பையர் தான் பிரதான பூசகரானாரென்று நான் சொல்லத்தக்கதாயில்லை.

கோயில் இரண்டாமுறை எப்பொழுது கட்டுவிக்கப்பட்டதென்பதைப்பற்றி உமக்குத் தெரியுமா?— உறுதியைப் பார்த்துத்தான் நான் சொல்லவேண்டும்.

உமது முன்னோரும் சுப்பையரும் கோயிலில் ஒரே காலத்திலிருந்து விவகாரங்களை நடத்த வேண்டுமென்பதா நியமனம்?—அதன்படி நடந்திருந்தால் அப்படித்தான் வந்திருக்கும். ஆனால் அப்படியொன்றும் நடக்கவில்லையென்பதை நான் அறிவேன்.

கோயிலிருக்கும் நிலத்திற்குப் பேரென்ன?—குருக்கள்வளவு.

அதன் தெற்கு எல்லை எது?—கோயிலின் புறவீதி.

வடக்கு?—தேர்வீதி.

தேர்வீதியைக் கோயிலுக்கு விட்டவர் யார்?—எனக்குத் தெரியாது.

அம்போடுவளவு என்று சொல்வதென்ன?—அம்போடுவளவு நாங்கள் குடியிருக்கும் வளவும் அடுத்த காணியும். அதில் தம்பையாக் குருக்க ளென்றொருவர் சிவன் கோயில் கட்டுவித்திருக்கின்றார்.

